**O.S.No. 16/2015**

**Date : 06.01.2023**

***வா.சா.1 நேசம்***

***1, 2, 4 பி.த.கு.வி***

தாவா சொத்து எனது பெற்றோருக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது. எனக்கு விவரம் தெரிந்த காலம் முதல் தாவா சொத்தினை எனது தகப்பனார் கிரையம் பெற்றது தெரியும். தாவா சொத்து எனது தகப்பனார் மற்றும் தாயாருக்கு கிரைய பாத்தியப்பட்டதாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் ஒரு பகுதி எனது தகப்பனாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட வகையில் உள்ளது. தாவா சொத்தில் பாதி எனது தகப்பனாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது ஆகும். எனது தாயாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் தாவா சொத்தில் பாத்தியம் என்று என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. தாவா சொத்தில் ஒரு பகுதி எனது தகப்பனாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டதற்கு ஆவணங்கள் எதுவும் கிடையாது. எனது தகப்பனார் சொல்லி தான் தெரியும். தாவா சொத்தின் எந்த பகுதியும் எனது தகப்பனாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது கிடையாது என்றாலும், எனது தாயாருக்கு தான் பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியினை எனது தகப்பனாரின் சகோதரர் மனைவியான புன்னியாவு என்பவரிடம் இருந்து எனது தகப்பனார் கிரையம் பெற்றார். தாவா சொத்து எனது தாயார் வழி பூர்வீக சொத்து என்றாலும், அது எனது தகப்பனாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது கிடையாது என்றாலும் சரியல்ல. எனது திருமணத்திற்கு பின்னர் எனது தாயார் மற்றும் சகோதரர்கள் தாவா சொத்தினை தனித்து அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரியல்ல. பின்னர் அவ்வாறு அனுபவம் செய்து வந்து அவர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா சொத்தின் ஒரு பகுதி 1ம் பிரதிவாதிக்கும், மற்றொரு பகுதி 3ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தர்மராஜின் பாகத்திற்கு ஈடாக 1, 3 பிரதிவாதிகள் தர்மராஜிக்கு பணம் கொடுத்து அதற்கான ரசீது பெற்றுள்ளனர் என்றால் சரியல்ல. அதன்பின்னர் 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதின் பேரில் எனது தாயார் 2ம் பிரதிவாதிக்கு 28.10.2009ல் பதிவு ஏற்பாட்டு ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதிக்கு 28.10.2009ல் ஏற்பாட்டின் மூலம் கிடைத்த விஸ்தீரணத்தினை 15.12.2014 தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அது முதல் தாவா சொத்து 4ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 12 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே தாவா சொத்தில் எனக்கு யாதொரு பாத்தியமோ உரிமையோ இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்பதையும், எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெறப்பட்டது என்பதையும் தெரிவிக்கும் பட்சத்திலே இவ்வழக்கில் தீர்முடிவு எட்டப்பட இயலும் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதியின் சொத்தையும் சேர்க்கததால் 5ம் பிரதிவாதியை பொறுத்த அளவில் நான் கோரும் பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து விவரம் முழுமையாக இல்லாததால் பங்கு உரிமை முடிவு செய்ய இயலாது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>வேண்டுகோளுக்கிணங்க 5ம் பி.த.கு.வி ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**